# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில்
## 01.04.2011 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

சில ஜுமுஆக்களுக்கு முன்பு (அதாவது) பிப்ரவரி கடைசி ஜுமுஆ குத்பாவில் உலகளாவிய முஸ்லிம்களுக்காக துஆ செய்வதற்கு விண்ணப்பம் செய்தவாறு அஹ்மதிகளுக்கு தங்களுடைய பொறுப்புகளின் பக்கமும் கவனமூட்டினேன். முஸ்லிம் நாடுகளின் அரசர்களுக்கு நேரடியாக, வெளிப்படையாக நம்முடைய முடிவுகளை எட்ட வைக்க நம்மிடம் வழிகள் எதுவுமில்லை. ஆற்றல்கள் எதுவுமில்லை. அரசர் என்ற நிலையிலும், ஆட்சியாளர் என்ற நிலையிலும் அவர்கள் செய்ய வேண்டிய உரிமைகளை சரியாகச் செய்வதற்கு அவர்களுக்கு புரிய வைக்கவும் முடியாது. ஆனால், சில இடங்களில் இந்த வகையில் நமது தூதுச் செய்தி சென்றடைந்திருக்கலாம். ஆனால் தெளிவான முறையில் தூதுச் செய்தி சென்றடைந்திருக்கிறதா என்பது தெரியாது.

எப்படியிருந்தாலும் அஹ்மதிகள் துஆவின் மீது நம்பிக்கை கொண்டுள்ளார்கள் என்பதை கூறியிருந்தேன். ஆகையால் அவர்களுக்கு துஆவின் பக்கம் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். அல்லாஹ் இந்த ஆட்சியாளர்களுககு அறிவை வழங்குவானாக. இந்த இஸ்லாமிய நாடுகள் எல்லாவிதமான தோல்வியிலிருந்தும் தப்பிக்கட்டுமாக. இதைப் போன்று மக்களுக்கும் தூதுச்செய்தி கூறியிருந்தேன். அவர்களும் தன்னுடைய பொறுப்புகளை புரிந்து கொள்ள வேண்டும். மேலும் தனது நாட்டை கொடுமைக்காரர்கள், பயங்கரவாதிகள் அல்லது மற்றவர்களுடைய வலையில் விழவைத்து விடக் கூடாது. ஆக, இன்றைய குத்பாவில் இந்த நாடுகளில் வசிக்கக் கூடிய அஹ்மதிகளுக்கு மீண்டும் தூதுச் செய்தியினை கூறுகின்றேன். இதற்கு முன்பும் கூறியிருக்கிறேன். துஆவின் பக்கம் கவனம் செலுத்துங்கள். மேலும் இந்த அறிவை எந்த அளவுக்கு முடியுமோ இரு பக்கமும் எடுத்துக் கூறுங்கள்.

அதாவது, கடினத்தை மேற்கொள்வது எந்த விஷயத்திற்கும் முடிவாகாது. மிகப்பெரிய ஆயுதம் துஆவாகும். பெரும்பான்மையான அஹ்மதிகள் இந்த தூதுச் செய்தியினைப் புரிந்து கொண்டார்கள். அல்லாஹ்வின் அருளால் அஹ்மதிகள் எந்த விதமான பொருள் சேதத்தை ஏற்படுத்தவும், கொலை, கொள்ளை, குழப்பம் விளைவித்தல் போன்றவற்றிலும் பொதுவாக பங்கு பெறுவதில்லை. ஆனால் சிலருடைய உள்ளத்தில் நாம் கொடுமை செய்கின்ற, அநீதியிழைக்கின்ற ஆட்சியாளருக்கு எதிராக அவர்களுடைய தவறான வழிகாட்டலுக்கு எதிராக நாம் எவ்வளவு தூரம் பொறுமையை மேற்கொள்ள வேண்டும்; நமது எதிர்நடவடிக்கை எவ்வாறு இருக்க வேண்டும் என்ற கேள்விகள் எழும்புகின்றன.

சில ஆப்பிரிக்க நாடுகளில் ஆட்சி மாற்றத்தினால் தடுப்பை ஏற்படுத்தக் கூடியவர்கள் மீது என்ன எதிர்நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். உதாரணமாக, ஐவரிகோஸ்ட்டில் இவ்வாறு நடக்கிறது. ஆட்சி மாற்றம் ஏற்படவில்லையெனில், அஹ்மதிகளுக்கு எந்த அளவுக்கு கொடுமைக்கு எதிராக எதிர்நடவடிக்கையை மேற்கொள்ளக்கூடிய மக்களுடன் சேர வேண்டும். அல்லது எந்த அளவு அரசுக்கு எதிராக ஊர்வலங்களில் கலந்து கொள்ள வேண்டும் என்ற கேள்விகளும் எழும்புகின்றன.

ஏனென்றால் சில படித்தவர்களும் கூட என்னுடைய தூதுச் செய்தியின் நோக்கத்தைப் புரியவில்லை. அவர்கள் கேள்விகளைக் கேட்டுக் கொண்டேயிருப்பார்கள். அவர்கள் வாயை அடைக்கக்கூடிய பதில்களை எதிர்பார்ப்பார்கள். மேலும் நாம் நமது உரிமைகளை கட்டாயப்படுத்தி பெறும் திட்டங்களில் பங்கு பெறலாமா? கூடாதா? என்பதையும் தெளிவுபடுத்த வேண்டுவார்கள்.

இதைப் பற்றி அரபு நாடுகள் மற்றும் ஆப்பிரிக்காவில், அரபி பேசக்கூடிய நாடுகளின் விஷயங்களை கண்காணிக்கக்கூடிய அரபிக் குழுவின் ஹனி தாஹிர் சாஹிவுடன் நான் மீட்டிங் நடத்தினேன். அவர்கள் மிகவும் தெளிவாகவும், விரிவாகவும் இந்த சூழ்நிலையில் அஹ்மதியுடைய எதிர்நடவடிக்கையின் செயல்பாடுகள் எவ்வாறிருக்க வேண்டும் என்பதையும் விளக்கினார்கள்.

மேலும் இதனை எழுத்து வடிவில் கொண்டு வந்து சம்பந்தப்பட்ட நாடுகள் அல்லது நமது தொடர்புகள் உள்ள நபர்களிடம் இதனைக் கொண்டு சேர்க்க வேண்டும் என்று நான் கூறினேன். இதனால் அஹ்மதிகளுக்கு உண்மை நிலை தெரிய வரும்.

ஆனால், சில கடிதங்கள் மற்றும் கேள்விகள் மூலம் சிலருக்கு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் அடிப்படை விஷயமே குர்ஆன், ஹதீஸ் மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கூற்றிற்கேற்ப இருக்க வேண்டும் என்பதே தெரியவில்லை என்று எனக்கு புரிகிறது. எனவே இதனைப் பற்றிய சில ஆதாரங்களை திரட்டியிருக்கிறேன். சில விஷயங்களை ஒன்றுசேர்த்திருக்கிறேன். அதனை உங்கள் முன்பு வைக்க விரும்புகின்றேன். மேலும் இதன் மூலம் எல்லாவிதமான சந்தேகங்களும் நீங்கிவிட வேண்டும்.

மிகவும் அடிப்படையான விஷயம் குர்ஆன் ஆகும். மேலும் இதில் ஆட்சியாளர்களுடன் எவ்வாறு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்? எவ்வாறு கட்டுப்பட வேண்டும்? என்பதைப் பற்றி என்ன கட்டளையிடுகிறது? என்பதைப் பார்க்க வேண்டும். பொதுவாக, குழப்பங்கள் ஏற்படும் போது உண்மையான முஸ்லிமுடைய எதிர்நடவடிக்கை என்னவாக இருக்க வேண்டும்? எந்தளவு தனது உரிமையைப் பெறுவதற்கு அரசாங்கத்திற்கு எதிரான செயல்களில் பங்கு கொள்ள வேண்டும் என்பதைப் பார்க்க வேண்டும்.

மேலும் ஹதீஸ் இதனைப் பற்றி என்ன கூறுகிறது? ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் என்ன கூறியிருக்கின்றார்கள் என்பதையும் பார்க்க வேண்டும். எனவே, அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்.

**எல்லா விதமான தீய செயல், விரும்பத்தகாத செயல் மற்றும் வரம்பு மீறல்களிலிருந்தும் அல்லாஹ் உங்களை தடுக்கின்றான். (16:91)**

இந்த வசனத்தை நாம் ஒவ்வொரு ஜும்ஆவிலும் ஓதுகின்றோம்.

**<u>ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பக்யி என்ற வார்த்தைக்கு விளக்கமளித்தவாறு கூறுகிறார்கள்:</u>**

அளவுக்கு அதிகமான, பயிர்களை அழித்து விடக்கூடிய அளவுக்கு பொழியக்கூடிய மழையை பக்யி என்றும், கொடுக்க வேண்டிய உரிமையை நிறைவேற்றாமல் இருப்பதையும், கொடுக்க வேண்டிய உரிமைகளை விட அதிகமாக கொடுப்பதுதையும் குறிக்கும்.

இதுதான் குர்ஆனின் அழகிய போதனையாகும். ஒவ்வொரு பிரிவைப் பற்றியும் ஒவ்வொரு கூட்டத்தைப் பற்றியும் கட்டளை உள்ளது. கட்டளையில், இது குறிப்பிட்ட ஒரு கூட்டத்திற்கு வந்தது என்றும், மற்ற பிரிவினருக்கு இது கிடையாது என்றும் கூற முடியாது. நான் தற்போது இந்த வசனத்திற்கு விளக்கம் கொடுக்கவில்லை. மாறாக, பக்யி என்ற வார்த்தைக்கு மட்டும் விளக்கமளிக்கிறேன்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியது போன்று உரிமையை நிறைவேற்றுவதில் குறைவு வைப்பது, உரிமையை நிறைவேற்றுவதில் அதிகப்படியாக செய்வது ஆகிய இரண்டையும் அல்லாஹ் தடுக்கின்றான்.

ஆட்சியாளர்களும், மக்களும் தங்களுடைய கடமைகளை நிறைவேற்றுவதற்கு கட்டளையிடப்பட்டுள்ளனர். ஆட்சியாளர் தனது கடமையில் கூடுதல் குறைவோ காட்டக்கூடாது. அதேபோல் மக்களும் கடமைகளை நிறைவேற்றுவதில் கூடுதல் குறைவு காட்டக்கூடாது. எவரெல்லாம் இவ்வாறு செயல்படுவாரோ அவர் அல்லாஹ்வின் எல்லையை மீறுபவராவார். அல்லாஹ்வின் வரம்பை மீறுபவர் அவனுடைய பிடியில் வருவார். வரம்பு மீறுபவரை அல்லாஹ் ஒருபோதும் நேசிப்பதில்லை.

எனவே இன்றைய காலத்தில் மக்கள் அரசாங்கத்திற்கு எதிராக கடுமை காட்டும் உணர்வை வைத்திருக்கிறார்கள். எனவே இன்று பொதுமக்களைப் பற்றி கூறுவேன். இது தொடர்பாக ஆட்சியாளருடைய தவறான நடவடிக்கைக்குப் பிறகும் கூட மக்களுக்கு, மூஃமின்களுக்கு பொறுமையை மேற்கொள்வதற்கு அறிவுறுத்தக்கூடிய பல ஹதீஸ்கள் உள்ளன.

புகாரி கிதாபுல் ஃபிதன் –ல் ஒரு ஹதீஸ் உள்ளது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அன்ஸார் சஹாபாக்களிடம் எனக்குப் பிறகு உங்களுக்கு விருப்பமில்லாத சில விஷயங்களை காண்பீர்கள் என்று கூறினார்கள்.

அப்துல்லாஹ் பின் ஸையத் பின் ஆமிர் கூறினார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அன்ஸார்களிடம் கவுஸர் தடாகத்தில் என்னை சந்திக்கும் வரை அந்த விஷயத்தில் பொறுமையுடன் இருக்க வேண்டும் என்று கூறினார்கள். ஸையத் பின் வகப் கூறினார்கள். நான் அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி) அவர்களிடமிருந்து கேட்டேன். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அவர்கள் கூறினார்கள். எனக்குப் பிறகு உங்களுடைய உரிமைகள் பறிக்கப்பட்டு மற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். மேலும் உங்களுக்கு விருப்பமில்லாத விஷயங்களையும் பார்ப்பீர்கள். இதனைக் கேட்டவுடன் சஹாபாக்கள், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இப்படிப்பட்ட நேரங்களில் நாங்கள் என்ன செய்யத் தாங்கள் கட்டளையிடுகிறீர்கள் என்று கேட்டனர். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அப்போதுள்ள ஆட்சியாளர்களுக்கு அவர்களின் உரிமைகளைக் கொடுங்கள்; நீங்கள் உங்களது உரிமைகளை அல்லாஹ்விடம் கேளுங்கள்.

மேலும் ஒரு ஹதீஸில் வருகிறது. ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடமிருந்து ஓர் அறிவிப்பை கூறுகிறார்கள். **ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

எவர் ஒருவர் தன்னுடைய அமீரிடம் ஏதாவது ஒரு விஷயத்தை விரும்பவில்லை என்றால் அவர் பொறுமை மேற்கொள்ள வேண்டும். ஏனெனில், எவர் ஒருவர் தன்னுடைய அமீருக்கு கட்டுப்படுவதில் ஒரு ஜாண் அளவு வெளியேறுவாரோ அவருடைய மரணம் அறிவீனர்களின் மரணம் போன்றதாகும்.

பிறகு ஹுஸைர் பின் ஹுதைர் உடைய ஓர் அறிவிப்பில் வருகிறது. ஒருவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் வந்து கூறினார். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் இன்னாரை ஆட்சியாளராக நியமித்து விட்டீர்கள். எனக்கு ஆட்சியைக் கொடுக்கவில்லை என்று கூறினார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். எனக்குப் பிறகு உங்களைவிட மற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதைப் பார்ப்பீர்கள். எனவே மறுமை நாளில் என்னை சந்திக்கும் வரை பொறுமையை மேற்கொள்வீராக.

சல்மா பின் யஸீத் அல்ஜாஃபி அவர்கள், ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களிடம் கூறினார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தன்னுடைய உரிமையை பெறக்கூடிய, எங்களுடைய உரிமைகளைத் தராத ஒரு ஆட்சியாளர் எங்கள் மீது இருந்தால், இத்தகைய சூழலில் எங்களுக்கு என்ன கட்டளையிடுவீர்கள் என்று கேட்டார். அதற்கு ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் முகம் திருப்பிக் கொண்டார்கள். பிறகு அவர்கள் அதையே கேட்டார். மறுபடியும் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் முகத்தை திருப்பிக் கொண்டார்கள். இதைப்போன்று இரண்டு மூன்று முறை தனது கேள்வியைக் கேட்டார். அப்போது அங்கிருந்த அஸீஸ் பின் கைஸ், அவரை பின்னால் இழுத்து அவர் அமைதியாக இருக்க முயற்சி செய்தார். அப்போது இந்த கேள்வி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு விருப்பமற்றதாக இருந்தது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில் ஆட்சியாளருடைய கூற்றைக் கேட்க வேண்டும்; அவருக்கு கட்டுப்பட வேண்டும். அவர் மீது சுமத்தப்பட்ட பொறுப்பிற்கு அவரிடம் கேள்வி கேட்கப்படும்; உங்கள் மீது சுமத்தப்பட்ட பொறுப்பிற்கு உங்களிடம் கேள்வி கேட்கப்படும்.

ஜன்சா பின் உமைய்யா கூறினார். உபாதா பின் சாமித் நோயுற்றிருந்த போது அவரிடம் சென்றோம். அல்லாஹ் உமக்கு நன்மையை ஏற்படுத்துவானாக என்று நாங்கள் கூறினோம். நீர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடமிருந்து கேட்ட ஹதீஸை எங்களுக்கு கூறுவீராக. இதன் மூலம் உமக்கு பலன் கிடைக்கட்டுமாக.

அவர் கூறினார்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எங்களை அழைத்து வரச் சொன்னார்கள். நாங்கள் அன்னாரிடம் பைஅத் செய்தோம். பைஅத்தின் போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், சந்தோஷமானாலும், வெறுப்பானாலும், கஷ்டமானாலும், எளிமையானாலும், உரிமைகள் பறிக்கப்பட்டாலும் ஆகிய ஒவ்வொரு நிலையிலும் ஆட்சியாளருக்கு கட்டுப்பட வேண்டும். எவர் ஆட்சியாளராக நியமிக்கப்படுகிறாரோ அவர் வெளிப்படையாக குஃப்ரில் ஈடுபடாதவரை அதனைப் பற்றி உம்மிடம் சான்றுயில்லாத வரை அவருடன் சண்டையிடக் கூடாது என்றும் வாக்குறுதி வழங்கினார்கள்.

இந்த ஹதீஸ்களில் அமீர்மார்கள் மற்றும் ஆட்சியாளர்களுடைய அநியாயமான, ஷரீஅத் சட்டத்திற்கு எதிரான செயல்களைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. இருந்தாலும் கூட இவர்களுக்கு எதிராக கிளர்ச்சி செய்வதற்கு உங்களுக்கு உரிமையில்லை என்று கூறப்பட்டுள்ளது.

அரசாங்கத்திற்கு எதிரான செயல்பாடுகள், பொருள்சேதம், கிளர்ச்சி ஏற்படுத்துதல் போன்ற செயல்கள் ஷரீஅத்தற்கு எதிரானவையாகும். இந்தக் கடைசி ஹதீஸிற்கு இன்னும் மிக தெளிவாக விளக்கமளிக்கிறேன். இந்த ஹதீஸின் கடைசி வார்த்தையில், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், ஆட்சியாளராக நியமிக்கப்பட்டவர் வெளிப்படையான குஃப்ரில் ஈடுபடாதவரை, அதனைப் பற்றி உம்மிடம் அல்லாஹ்வின் ஆதாரம் உம்மிடம் இருக்கும் வரை அவருடன் சண்டையிடக் கூடாது என்று வாக்குறுதி வழங்கினார்கள். ஹதீஸின் இந்த கடைசி வார்த்தைக்கு பொருள் கூறியவாறு, ஸலஃபி, வஹாபி மற்றும் பலவந்தத்தை விரும்பக்கூடிய பல பிரிவுகள் இவ்வாறு கூறுகிறது. அதாவது ஆட்சியாளர்களிடமிருந்து வெளிப்படையாக குஃப்ர் வெளிப்படாத வரை ஆட்சியாளருடன் சண்டையிடுவது அனுமதிக்கப்படவில்லை. ஆனால் ஆட்சியாளர்களிடம் குஃப்ர் காணப்பட்டால் அதற்கு நிவாரணமாக சண்டையிடுவது அல்லது ஆட்சியைப் பறிப்பது கடமையாகும் என்று கூறுகிறார்கள். இப்படிப்பட்ட எண்ணம் கொண்ட கடினத்தை விரும்பும் ஜமாஅத்துகள் இந்த ஹதீஸின்படி அரசுக்கு எதிராக கிளர்ச்சி செய்வது ஆகுமானதாகவும், தன்னுடைய மார்க்கத் தீர்ப்புகளை எவ்வாறு உறுதிப்படுத்த முயற்சி செய்கிறார்கள் என்றால், ஃபத்வா கொடுப்பவர்கள் கூறுகிறார்கள். நாம் எவருக்கு ஃபத்வா கொடுத்திருக்கின்றோமோ அவரை காஃபிர் என எண்ணாதவரும் காஃபிர் ஆவார். இது மிகப்பெரிய தொடர்ச்சியைக் கொண்டதாகும்.

இந்த ஹதீஸில் கூறப்பட்ட வார்த்தைகள், நீங்கள் கட்டுப்பட வேண்டும். குஃப்ரான விஷயம் தென்பட்டாலோ, அல்லது உங்களை குஃப்ரில் ஈடுபட வற்புறுத்தினாலோ தவிர மற்ற அனைத்து விஷயங்களிலும் நீங்கள் கட்டுப்பட வேண்டும். அந்த நேரத்திலும் கிளர்ச்சி செய்யக் கூடாது. மாறாக அவருடைய பேச்சைக் கேட்கக் கூடாது என்பது மட்டும் தான். ஆக, இது இவர்களுடைய பார்வையாகும். அஹ்மதிகளுடைய பார்வை கிடையாது. கட்டுப்படாமல் இருப்பதற்கு சில சூழ்நிலைகள் உள்ளன. நான் கூறியது போன்று குஃப்ர் செய்வதில் கட்டாயப்படுத்தப்பட்டால், ஜமாஅத்தில் இதற்கு ஒரு உதாரணம் காணக் கிடைக்கிறது.

பாகிஸ்தான் மற்றும் மற்ற நாடுகளில் அஹ்மதிகளுக்கு நீங்கள் உங்களை முஸ்லிம் என்று கூறாதீர்கள் என்று கூறப்படுகிறது. நாம் இந்த விஷயத்தை ஏற்க மாட்டோம். நாம் நம்மை முஸ்லிம் என்றே கூறுவோம். மேலும் கலிமா சொல்லக் கூடாது என்று கூறுகிறார்கள். ஆனால் நாம் சொல்வோம். ஒருவர் மற்றவருக்கு சலாம் சொல்லக் கூடாது என்றும், குர்ஆனை ஓதக்கூடாது என்றும் கூறுகிறார்கள். இவை நமது மார்க்கத்தின் விஷயமாகும். இந்த விஷயத்தில் ஹதீஸின் அடிப்படையில் கட்டுப்படுவதற்கு அவசியம் கிடையாது. ஆனால் இங்கு நாம் கிளர்ச்சி செய்ய மாட்டோம். ஆனால் இதுபோன்ற விஷயங்களை சட்டங்களை நாம் ஏற்கமாட்டோம். ஏனெனில் இது அல்லாஹ், ரஸூலின் விஷயமாகும். இதனைத் தவிர நாட்டிலுள்ள மற்ற சட்ட திட்டங்களை அஹ்மதிகள் கடைபிடிக்கின்றனர்.

நமது பார்வைக்கு சாதகமாக ஒரு பழைய இமாமின் கூற்று உள்ளது. அதனை நான் கூறுகின்றேன். இந்த ஹதீஸின் விளக்கத்தில் ஹஸ்ரத் அம்மாம் அன் நபவி (ரஹ்) எழுதுகிறார்கள். குஃப்ர் பலா என்றால் வெளிப்படையான குஃப்ர் ஆகும். இந்த ஹதீஸின் குஃப்ர் என்பது பாவம் ஆகும். மேலும் கூறுகிறார்கள். இந்த ஹதீஸிற்கு என்ன அர்த்தம் என்றால் நீங்கள் அரசாட்சிக்கு கீழ் இருந்தவாறு அரசுக்கு எதிராக சண்டையிடக் கூடாது. மேலும் அவர்கள் மீது ஆட்சேபனை செய்யக் கூடாது. ஆனால் நீங்கள் அவர்களிடம் நிரூபிக்கப்பட்ட ஆதாரமான தீய செயலைக் கண்டால் தவிர, அது இஸ்லாத்தின் சட்டதிட்டங்களுக்கேற்ப குர்ஆன், ஹதீஸ் அடிப்படையில் அது தவறு என்று நீங்கள் அறிந்திருந்தால் தவிர அதனை தவறாக நீங்கள் எண்ணுங்கள். எப்போதும் எந்நிலையிலும் உண்மையே பேசுங்கள். எனவே, அப்படிப்பட்ட ஆட்சியாளர்களுடன் சண்டையிடுவது அவர்களுக்கு எதிராக கிளர்ச்சி செய்வது இஸ்லாத்தின் அடிப்படையில் ஹராமாகும். அந்த ஆட்சியாளர் தீயவராகவும், கொடுமைக்காரராக இருந்தாலும் கூட அவருக்கெதிராக கிளர்ச்சி செய்யக் கூடியவர்கள் எழுகிறார்கள். நான் இந்த ஹதீஸிற்கு கூறிய அர்த்தங்களை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின்

மற்ற ஹதீஸ்களும் ஆமோதிக்கின்றன. அஹ்லே சுன்னத் பிரிவும் இதனை ஏற்றுக் கொண்டுள்ளது. தீமையின் காரணமாக ஆட்சியாளரை மாற்றுவதற்கு அனுமதி கிடையாது.

உலமாக்கள் கூறுகின்றார்கள். தீய, அநீதியிழைக்கக்கூடிய ஆட்சியாளர்களை மாற்றுவது, அவர்களுக்கு எதிராக சண்டையிடாமல் இருப்பதன் காரணம் என்னவென்றால், அப்படிப்பட்ட சூழ்நிலையில் அதிகமாக குழப்பம், இரத்தம் சிந்துதல், தமக்கிடையில் பிரச்சனைகள் உண்டாகும் நிலை ஏற்படும். எனவே, தீய அநீதி இழைக்கக்கூடிய ஆட்சியில் இருப்பது, ஆட்சியை மாற்றுவதால் ஏற்படும் பிரச்சனைகள், குழப்பங்கள் போன்றவை குறைவாகவே இருக்கும். இந்த விஷயத்தை நாம் இன்று பார்க்கின்றோம். இது உண்மையென்று தெளிவாகின்றது. இரண்டுபுறமும் சண்டை நடைபெறுகிறது. துப்பாக்கிகள் உபயோகப்படுத்தப்படுகிறது. உயிர்கள் சேதமடைகின்றன. முஸ்லிம், முஸ்லிமை கொலை செய்கின்றார்.

**பிறகு புகாரியில் ஒரு ஹதீஸ் உள்ளது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அல்லாஹ் விதித்துள்ள வரம்புகளைப் பேணாதவர்க்கும் அல்லாஹ்வின் வரம்புகளை மீறுபவர்களுக்கும் ஓர் உதாரணம் கூறப்பட்டுள்ளது. அது, அந்த சமுதாயத்தை போன்றதாகும். அவர்கள் கப்பலில் பயணிப்பதற்காக சீட்டு குலுக்கிப் போட்டனர். அதன் விளைவாக சிலர் கப்பலின் மேல் தளத்திலும், சிலர் கப்பலின் கீழ் தளத்திலும் தங்க வேண்டியதாயிற்று. கப்பலின் கீழ் தளத்தில் உள்ளவர்கள் மேல் தளத்திற்கு சென்று தண்ணீர் கொண்டு வர நேரிட்டது. இதனால் மேல் தளத்தில் உள்ளவர்கள் இதனை கஷ்டமாக உணர்ந்தார்கள். எனவே கப்பலின் கீழ் தளத்தில் உள்ள ஒருவன் கோடாரியை எடுத்து கப்பலின் கீழ் தளத்தில் துளையிட ஆரம்பித்தான். அப்பொழுது கப்பலின் மேல் தளத்தில் உள்ளவர்கள் கீழே வந்து அவனிடம் ஏன் இவ்வாறு செய்கிறாய் என்று கேட்டனர். நான் மேல் தளத்திற்கு சென்று தண்ணீர் கொண்டு வருவது உங்களுக்கு கஷ்டமாக இருக்கிறது. மேலும் தண்ணீர் இல்லாமல் நான் வாழ முடியாது. எனவே மேல் தளத்தில் உள்ளவர்கள் அவனது கையை பிடித்தால், அவர்கள் மூழ்குவதிலிருந்தும், அவன் மூழ்குவதிலிருந்தும் தப்பித்துக் கொள்ளலாம். ஒருவேளை அவனை அவ்வாறே விட்டு விட்டால், அவன் கப்பலில் துளையிட்டு விடுவான். இதனால் அவனையும் அழித்து விடுவான். மற்றவர்களையும் அழிவுக்குள்ளாக்கி விடுவான்.

இந்த ஹதீஸிலிருந்து சிலர் இந்த விளக்கங்களை கொடுக்கிறார்கள். அதாவது மக்களை தீமையிலிருந்தும், தவறான செயலிலிருந்தும் வலுக்கட்டாயமாக தடுப்பது சரி அல்ல. மாறாக இதன் மூலம் தமக்கிடையில் குழப்பம் சண்டை சச்சரவுகள் ஆரம்பித்து விடும். எனவே, இதிலிருந்து அரசாங்கத்திற்கு எதிராக கிளர்ச்சி செய்தோம் எனில், அது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு எதிராக செயல்படுவதாகி விடும்.

நான் ஹதீஸை தெளிவுபடுத்துகிறேன். அதாவது கப்பலில் உள்ளவர்கள் அவரது கையைப் பிடித்தால், அவர் மூழ்குவதிலிந்தும் காப்பாற்றப்படுவார். தாம் மூழ்குவதிலிருந்தும் தப்பித்துக் கொள்வார்கள். அவரை விட்டு விட்டால் கப்பலின் கீழ் தளத்தில் துளையிட்டு விட்டால், அவரையும் மூழ்கடிப்பார்கள். தாமும் மூழ்கி விடுவார்கள். எனவே இதிலிருந்து ஒரு விளக்கம் எடுக்கப்படுகிறது. வலுக்கட்டாயாக ஒரு குழப்பம் உருவாகிறது என்றால் அதனை முறியடிப்பது அனுமதிக்கப்பட்டதாகும்.

ஆனால் மற்ற ஹதீஸ்கள் இதற்கு மாறுபட்டவையாக இருக்கின்றன. அரசாங்கத்தை பொறுத்தவரையில் இவ்வாறு செய்வது சரி அல்ல. இதற்கு ஆதாரமாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது ஒரு ஹதீஸ் இருக்கிறது. அதன் மூலமாக இது விளக்கப்படுகிறது. அதாவது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கடினம் மேற்கொள்வதற்கு கட்டளையிட்டிருக்கிறார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் குர்ஆனின் போதனைக்கு மாற்றமான கருத்தை ஒருபோதும் கூறியிருக்கமாட்டார்கள். இதனை புரிவதில் மக்களுக்கு தவறு ஏற்பட்டிருக்கிறது. அறிவிப்பில் இவ்வாறு வருகிறது.

சையத் குத்ரி (ரலி) அவர்கள் கூறுகிறார்கள். நான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறக் கேட்டேன். உங்களில் எவராவது வெறுக்கத்தக்க செயலைக் கண்டால் தனது கையால் அதனை தடுத்து நிறுத்த வேண்டும். அதற்கான ஆற்றல் இல்லையென்றால் தனது நாவினால் அதனைத் தடுக்க வேண்டும். அதற்கும் ஆற்றல்

இல்லையென்றால் தனது உள்ளத்தில் அதனை தீயதாக எண்ண வேண்டும். இது மிகவும் குறைபாடுள்ள ஈமானாகும்.

இமாம் முல்லா அரி காரி எழுதுகின்றார்கள்: இதன் மொழியாக்கம் என்னவென்றால், நமது சில உலமாக்கள் கூறுகின்றார்கள். வெறுக்கத்தக்க செயலை கையினால் மாற்றப்பட வேண்டும் என்ற கட்டளை ஆட்சியாளர்களுக்காகும். நாவினால் மாற்றப்பட வேண்டும் என்ற கட்டளையானது உலமாக்களுக்காகும். உள்ளத்தால் வெறுக்கத்தக்க செயலை வெறுப்பது என்ற கட்டளையானது மூஃமின் மக்களுக்காகும்.

எனவே இது இந்த ஹதீஸின் அழகிய விளக்கம் ஆகும். மூன்று விஷயங்கள் இருக்கின்றன. இந்த மூன்று விஷயங்களும் மூன்று தனிப்பட்ட படித்தரங்களைக் கொண்ட நபர்களுக்காகும். அங்கு கப்பலில் துளையிடப்படுவதை தடுப்பது அங்கு அதற்கு தகுதிவாய்ந்த நபருக்கு மட்டும் அந்த கட்டளையாகும். அது இல்லாமல் ஒவ்வொருவரும் தடுக்க முயன்றால் அங்கு குழப்பம் நிலவி விடும்.

**குழப்பம் மற்றும் அமைதியின்மை பற்றி அல்லாஹ் கூறுகின்றான்.**

**அல்லாஹ் குழப்பத்தை விரும்புவதில்லை. (2:206)**

மக்கள் அரசுக்கு எதிராக ஏதாவது ஒரு விஷயத்தை விரும்பவில்லை என்றால் அரசாங்கத்திற்கு எதிராக எழுந்து பொருள் சேதத்தை ஏற்படுவத்துவது, கூச்சல் குழப்பத்தை ஏற்படுத்துவது, கொலை, கொள்ளை, கிளர்ச்சியை ஆரம்பித்தது சரி என்றால், இதுவும் ஷரீஅத்திற்கு எதிரான விளக்கமாகும்.

இதனைப் பற்றி குர்ஆனின் கட்டளையை ஏற்கனவே கூறிக் கொண்டுதான் வந்திருக்கிறேன்.

நபிமார்கள் அரசாங்கத்திற்கு கட்டுப்பட்டு நடப்பது பற்றி என்ன முன்மாதிரியைக் கூறியிருக்கின்றார்கள் என்றால், ஒரு ஹதீஸில் வருகிறது. 1 இலட்சத்து 24 ஆயிரம் நபிமார்கள் உலகில் வந்துள்ளார்கள்.

திருக்குர்ஆன் 20, 25 நபிமார்களின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றி கூறியிருக்கிறது. ஆனால் எந்த நபியைப் பற்றியும் உலக விஷயத்தில் அவர்களது காலத்திலிருந்த அரசாங்கத்திற்கு எதிராக கிளர்ச்சி செய்ததாக கூறப்படவில்லை. மேலும் தன்னை பின்பற்றக் கூடியவர்களை ஒன்றுதிரட்டி போராட்டம் நடத்தியதோ பொருள் சேதத்தை ஏற்படுத்தியதோ கிடையாது.

மார்க்க விஷயங்களில் ஒவ்வொரு நபியும் தன்னுடைய காலத்தில் வாழ்ந்த ஒவ்வொரு ஆட்சியாளருக்கும் எதிராக தவறான நம்பிக்கைகளுக்கு வெளிப்படையாக மறுப்பு தெரிவித்தார்கள். மேலும் சத்திய விஷயங்களுக்கு வலிமையுடன் முழுமையாக தப்லீக் செய்தார்கள்.

ஹஸ்ரத் யூசுஃப் (அலை) அவர்களது முன்மாதிரியைக் கூறுகிறேன். பொதுவாக இவர்களைப் பற்றி தான் கூறப்படும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களும், ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் (ரலி) அவர்களும் கூறுயிருக்கின்றார்கள்.

**அல்லாஹ் ஆரம்பத்திலேயே கூறுகின்றான்:**

நாம் உமக்கு வஹி அறிவித்த இந்த குர்ஆன் மூலம் அழகிய விளக்கங்களை உமக்கு அளித்தோம். இதற்கு முன்பு நீர் அறியாதவர்களைச் சேர்ந்தவராக இருந்தீர்.

நிரூபிக்கப்பட்ட அந்த அழகிய விளக்கங்கள் யாவை? குர்ஆன் மிகத் தெளிவாக கூறுகின்றது. இந்த சூரா யூசுஃப் -ல் அதிகமாக ஹஸ்ரத் யூசுஃப் (அலை) அவர்களது வாழ்க்கையைப் பற்றியே உள்ளது. இந்த வாழ்க்கையின் சுருக்கம், ஹஸ்ரத் யூசுஃப் (அலை) அவர்கள் எகிப்தின் காஃபிர் அரசன் ஃபிர்அவ்ன் அமைச்சரவையில் நிதி அமைச்சராக, பொருள்களின் கண்காணிப்பாளராக செயல்பட்டார்கள். ஒருவேளை அரசனுக்கு யூசுஃப் (அலை) அவர்கள் பற்றி இவர் விசுவாசி கிடையாது. இவர் நயவஞ்சகர்களின் செயலை செய்கிறார் என்று நினைத்தால் ஒருபோதும் அரசர் தன்னுடைய கூட்டத்தில் இவரை சேர்த்திருக்கமாட்டார்.

ஹஸ்ரத் யூசுஃப் (அலை) அவர்களது உள்ளத்தில் அரசனுக்கு எதிராக பொறாமையையும் வெறுப்பையும் வைத்துக் கொண்டு, வெளிப்படையாக அவனுக்கு விசுவாசியாகவும், கட்டுப்பட்டு நடப்பவராகவும் இருந்தார் என்று ஹஸ்ரத் யூசுஃப் (அலை) அவர்கள் பற்றி நினைப்பது மரியாதைக் குறைவான செயலாகும். (நவூதுபில்லாஹ்)

**அல்லாஹ் கூறுகின்றான்:**

**இவ்வாறு நாம் யூசுஃபிற்காக திட்டம் வகுத்தோம். இல்லையென்றால் அவரால் மன்னரின் சட்டத்தின் கீழ் இருந்து கொண்டு தம் சகோதரரை அல்லாஹ்வின் நாட்டமின்றி தம்மிடம் வைத்துக் கொள்ள இயலாதிருந்தது. (12:77)**

அதாவது ஹஸ்ரத் யூசுஃப் (அலை) அவர்கள் எகிப்து அரசனின் சட்டத்திற்கேற்ப தனது சகோதரனை எகிப்தில் தங்க வைப்பதற்கு சக்தியற்றவர்களாக இருந்தார்கள். இதனால்தான் அல்லாஹ் இவ்வாறு திட்டம் தீட்டினான். ஹஸ்ரத் யூசுஃப் (அலை) மறதியில் தனது சகோதரனுடைய பொருட்களுடன் குவளையை வைத்து விட்டார்கள். பிறகு சோதனை செய்யப்பட்ட போது அவர்களது சகோதரனுடைய பொருள்களிலிருந்து அந்த குவளை கண்டுபிடிக்கப்பட்டது.

இதிலிருந்து ஹஸ்ரத் யூசுஃப் (அலை) அவர்கள் எகிப்து அரசனின் சட்ட திட்டங்களுக்கு கட்டுப்பட்டு நடந்தார்கள் என்பது தெளிவாகிறது. உலக விஷயங்களில் அரசனுடைய தவறான கொள்கைகளை பின்பற்றவில்லை என்பதும் தெரிகிறது.

**திருக்குர்ஆனில் அல்லாஹ் ஓரிடத்தில் கூறுகின்றான்:**

**நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டு நடங்கள். இத்தூதருக்கும், உங்களுடைய அதிகாரிகளுக்கும் கட்டுப்பட்டு நடங்கள். பின்னர் உங்களுக்குள், ஏதாவது ஒன்றில் தர்க்கம் ஏற்பட்டால் நீங்கள் அல்லாஹ்விடத்தும், இறுதிநாளிடத்தும் நம்பிக்கை கொண்டவர்களாயின், அதனை அல்லாஹ்விடமும் இத்தூதரிடமும் கொண்டு செல்லுங்கள். (அவர்களின் கட்டளைகளின் அடிப்படையில் பிரச்சனைக்கு முடிவு காணுங்கள்). இது சிறந்ததும், மிக்க நல்ல முடிவைத் தருகின்றதுமாக இருக்கும். (4:60)**

**இதனைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அல்லாஹ், ரஸூல் மற்றும் தன்னுடைய அரசர்களுக்கு கட்டுப்பட்டு நடங்கள் என்று அல்லாஹ் கூறுகின்றான்.

**மேலும் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

அதாவது அல்லாஹ், அவனது ரஸூல் மற்றும் அரசர்களுக்கு கட்டுப்படுங்கள்.

மேலும் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: முஸ்லிம்களே! ஏதாவதொரு விஷயத்தில் உங்களுக்கிடையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டால் இதற்கு முடிவு காண்பதற்கு அல்லாஹ் மற்றும் ரஸூலிடம் ஒப்படையுங்கள். நீங்கள் அல்லாஹ்வின் மீதும் மறுமை நாளின் மீதும் நம்பிக்கை கொள்பவர்களாயின், இவ்வாறு செய்வது சிறந்ததாகும். மிக்க நல்ல முடிவை தருகின்றதும் ஆகும்.

**மேலும் கூறுகின்றார்கள்:**

நீங்கள் ஏதாவதொரு விஷயத்தில் தர்க்கம் செய்தீர்களாயின் அந்த விஷயத்தின் முடிவைக் காண்பதற்காக அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலின் பக்கம் திரும்புங்கள். அல்லாஹ் மற்றும் ரஸூல் தீர்ப்பு வழங்கக்கூடியவர்களாக ஆக்குங்கள். மற்றவர்களை ஆக்காதீர்கள். அல்லாஹ் மற்றும் ரஸூலுடைய தீர்ப்பு இறுதியாகும். இதனால் தான் நான் முதலில் கூறினேன். எந்த உலக விஷயங்களிலும் கிளர்ச்சி செய்யாதீர்கள். ஒருவேளை குஃப்ரைக் கண்டால், குஃப்ர் செய்வதற்கான கட்டளையைக் கேட்டால் இதற்கு கட்டுப்படுதல்

கிடையாது. இதனை தவிர மற்ற காரியங்களில் கட்டுப்படுதல் கடமையாகும். ஆனால் கிளர்ச்சி செய்வதற்கு எந்த நிலையிலும் அனுமதி கிடையாது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

திருக்குர்ஆனில் அத்தீவுல்லாஹ வஅத்தீவுர் ரஸூல வ உலில் அம்ரி மின்கும் என்ற கட்டளை உள்ளது. இங்கு உலில் அம்ரி மின்கும் –க்கு கட்டுப்பட வேண்டும் என்று மிகத் தெளிவான கட்டளை உள்ளது. மின்கும் என்றால் அரசாங்கம் கிடையாது என்று எவராவது கூறுவாரானால் இது அவரது தவறாகும். ஷரீஅத்தின்படி செயல்படக் கூடிய அரசாங்கம் மின்குமில் சேர்ந்தவையாகும். எவர் நம்மை எதிரியாக்க மாட்டாரோ அவர் நம்மை சேர்ந்தவராவார். குர்ஆனின் அடிப்படையில் அரசாங்கத்திற்கு கட்டுப்பட வேண்டும். அவர்களுடைய விஷயங்களைக் கேட்க வேண்டும்.

ஒருவேளை அதிகாரி அநீதியிழைக்கக் கூடியவராக இருந்தார் என்றால் அவரைப் பற்றி தீயதாக எதுவும் பேச வேண்டாம். தன்னிடம் சீர்திருத்தத்தை ஏற்படுத்த வேண்டும். அல்லாஹ் அவரை மாற்றி விடுவான். அல்லது அவரை நல்லவராக ஆக்கி விடுவான். கஷ்டம் நமது தீய செயல்களினால்தான் வருகிறது. ஏனென்றால் மூஃமின்களுக்கு அல்லாஹ் சத்தார் (குறைகளை மறைப்பவன்) ஆக இருக்கின்றான். மூஃமின்களுக்கு இறைவனே தேவையானவற்றை செய்கிறான். என்னுடைய அறிவுரை என்னவென்றால், எல்லா விதத்திலும் நன்மையின் முன்மாதிரி ஆகுங்கள். இறைவனுடைய உரிமையைப் பறிக்காதீர்கள். நன்மையின் முன்மாதிரியை அஹ்மதிகள் நிலைநாட்ட வேண்டும். அஹ்மதிகளே இதை நிலைநாட்ட வேண்டும்.

உலில் அம்ரி மின்கும் என்பதில் வெறும் முஸ்லிம் அதிகாரிகள் மட்டும் கிடையாது. இதனைப் பற்றி ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். சில முஸ்லிம்கள இந்த வசனத்தைப் படித்து விட்டு இது வெறும் முஸ்லிம் அதிகாரிகளுக்கு மட்டுமே பொருந்தும் என நினைக்கின்றனர். அதிகாரிகளுக்கு மட்டுமே கட்டுப்பட வேண்டும் என்று நினைக்கின்றனர். இது மிகவும் தவறாகும். இது திருக்குர்ஆனின் போதனைக்கு மாற்றமானதாகும்.

இங்கு மின்கும் என்ற வார்த்தை வந்துள்ளது. இருந்த போதிலும் மின்கும் என்பது உங்களுடைய மார்க்கத்தைச் சார்ந்தவர் என்று பொருள் கிடையாது. இதற்கு உங்களிலிருந்து அதிகாரியாக நியமிக்கப்படுபவர் என்பதே பொருளாகும். திருக்குர்ஆனில் அல்லாஹ் காஃபிர்களைப் பார்த்து கூறுகின்றான்.

**ஜின்னும் மனிதர்களுமாகிய கூட்டத்தினரே! உங்களிடமிருந்தே உங்களிடம் தூதர்கள் வந்து, உங்களுக்கு எனது வசனங்களைப் படித்துக் காட்டி, உங்களுக்குரிய இந்த நாளைச் சந்திப்பது குறித்து உங்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்யவில்லையா? இதற்கு அவர்கள், நாங்கள் எங்களுக்கு எதிராகச் சாட்சி பகர்கின்றோம் என்பார்கள். மேலும் உலக வாழ்க்கை அவர்களை ஏமாற்றி விட்டது. எனவே அவர்கள் நிராகரிப்பவர்களாயிருந்தனர் என அவர்கள் தங்களுக்கு எதிராக (த் தாங்களே) சாட்சி பகர்வர். (6:131)**

இங்கு இந்த வசனத்திற்கு மின்கும் என்ற வார்த்தைக்கு மார்க்கம் என்று பொருள் கொடுத்தால் (நவூதுபில்லாஹ்) ரஸூல் காஃபிர்களைச் சேர்ந்தவராக இருந்தார் என்றாகிவிடும். எனவே, மின்கும் என்பதற்கு தனது மார்க்கம் என்று பொருள் கொள்வது அவசியம் கிடையாது. இது வேறு பல பொருள்களும் உபயோகப்படுகிறது. இங்கு உங்கள் நாட்டைச் சேர்ந்த அதிகாரிக்கு என்பதே பொருளாகும். அதிகாரிக்குக் கட்டுப்பட்டு நடப்பது என்பதல்ல. மாறாக உங்களுடைய அதிகாரிகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பது என்பதாகும்.

இதற்கு திருக்குர்ஆன், ஹதீஸைக் கொண்டு முடிவு செய்யுங்கள் என்பதல்ல. அதிகாரிகளுடன் தர்க்கம் ஏற்பட்டால் இறைவன் மற்றும் அவனுடைய ரஸூலின் போதனைகளின் பக்கம் அவற்றை கொண்டு செல்ல வேண்டும். அந்தப் போதனையை அரசாங்கத்திற்கு அவர்களுடைய தவறுகளின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். அதை அவர்கள் ஏற்கவில்லையென்றால் அதனை அல்லாஹ்வின் பக்கம் விட்டுவிட வேண்டும். அவனே முடிவெடுப்பான். அநீதிக்கேற்ப தண்டனையைக் கொடுப்பான்.

நான் ஹஸ்ரத் யூசுஃப் (அலை) அவர்களுடைய சம்பவத்தினை கூறினேன்.

திருக்குர்ஆனில் ஹஸ்ரத் யூஃசுப் (அலை) அவர்களைப் பற்றிய சம்பவம் வந்துள்ளது. ஓர் அதிகாரி எந்த மார்க்கத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரி, கட்டுப்படுதல் அவசியமாகும். ஒருவேளை அவருடைய கட்டளை ஷரிஅத்துடைய கட்டளைக்கு எதிராக இருந்தாலும், அவருக்குக் கட்டுப்பட வேண்டும்.

**ஹஸ்ரத் யூசுஃப் (அலை) அவர்களைப் பற்றி அல்லாஹ் கூறுகின்றான்.**

அவர்கள் அவர்களுடைய சிறிய சகோதரர்களை அழைத்து வந்தபோது அவர்கள் நாட்டின் சட்டத்திற்கேற்ப அவரை தன் பக்கத்தில் வைத்து கொள்ள முடியாதவராய் இருந்தார். இறைவன் அவர்களுக்கு ஒரு வழியினை ஏற்படுத்திக் கொடுத்து விட்டான்.

**இதைப் போன்று தொடர்ந்து கூறுகிறார்கள்:**

**அவர் (யூசுஃப்) என்னை நாட்டின் கருவூலங்களுக்கு (அதிபதியாக) நியமியுங்கள். (12:56)**

அநீதியிழைக்கக்கூடிய அதிகாரி, காஃபிர் அதிகாரிகளிடமிருந்து பொறுப்பை பெறுவது தன்னுடைய உயிர் மீது நம்பிக்கை கொண்டவருக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. அவர் உண்மையில் எப்பொழும் நிலைநிற்பாரானால், உண்மையில் நிலை நிற்றல் என்பது தன்னுடைய ஷரீஅத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதல்ல என்பதை ஞாபகத்தில் வைத்து கொள்ள வேண்டும். எவ்வாறு ஹஸ்ரத் யூசுஃப் (அலை) அவர்களுடைய சகோதரருடைய வி-யத்திலிருந்து தெளிவாகிறதோ அவ்வாறே காஃபிரிடம் வேலை பார்ப்பதற்கு மூஃமினுக்கு தன்னுடைய விருப்பபடி செயல்பட வேண்டும் என்பதல்ல. மாறாக உண்மையைப் பாதுகாத்தல் என்பது அநீதியிழைக்ககூடிய வி-யங்களில் ஒன்று சேரக்கூடாது. எனவே, ஹஸ்ரத் யூசுஃப் (அலை) அவர்களுடைய வாழ்க்கையிலிருந்து தெளிவாகிறது. காஃபிர் அரசாங்கமாக இருந்தாலும் அதற்கு கட்டுப்பட்டு நடப்பது மிகவும் அவசியமாகும்.

அதிகாரிகளுடன் கருத்து வேறுபாடு ஏற்படும் போது என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி மேலும் விளக்கமளிக்கிறார்கள். இதனைப் பற்றி முதலிலும் கூறப்பட்டு விட்டது. அதிகாரி முஸ்லிமாக இருந்தால் மட்டும் கட்டுப்பட வேண்டும் என்பதல்ல. இந்த கட்டளை இரண்டுவிதமாக வருகிறது.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இதனைப் பற்றி என்ன கூறியிருக்கிறார்கள் என்பதைப் பாருங்கள்.

நான் உங்களுக்கு வஸிய்யத் செய்கிறேன். நீங்கள் இறையச்சத்தை மேற்கொள்ளுங்கள். கட்டுப்படுதல் மற்றும் விசுவாசத்தை உங்களுடைய நடைமுறையாக ஆக்கிக் கொள்ளுங்கள். ஒரு கருப்புநிற அடிமை உங்களுடைய அதிகாரியாக இருந்தாலும் சரியே, மேலும் எனக்குப் பிறகு உயிருடன் இருக்கக்கூடியவர்கள் மக்கள் மத்தியில் மிகப்பெரிய கருத்து வேறுபாடுகளை பார்ப்பார்கள். அடிப்படிப்பட்ட நேரத்தில் உங்களுக்கு என்னுடைய வஸிய்யத் என்னவென்றால் நீங்கள் என்னுடைய சுன்னத், எனக்குப் பிறகு வரக்கூடிய குலஃபாயே ராஸிதீனுடைய சுன்னத்தை மேற்கொள்ள வேண்டும். தமஸ்ஸகூ ஃபீஹா – நீங்கள் அந்த சுன்னத்தை உறுதியாகப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். எவ்வாறு ஒருபொருளை பற்களினால் பிடிப்போமோ அதைப் போன்று பற்றிப் பிடித்துக் கொள்ள வேண்டும். ஒருபோதும் எனது மற்றும் எனது கலீஃபாக்களின் வழியை விட்டு விடக் கூடாது. இந்த ஹதீஸ் முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பலில் இடம்பெற்றுள்ளது.

உலக விஷயங்களைப் பற்றி என்ன வழிமுறை உள்ளது என்பதைக் குறித்து புகாரியில் இவ்வாறு வருகிறது.

எனக்குப் பிறகு வரவிருக்கின்ற நிலையைப் பார்க்கும் போது உங்கள் மீது அநீதியிழைக்கப்படும். இதைப் பற்றி ஏற்கனவே கூறப்பட்டுள்ளது. இது உலக ஆட்சியாளர்களுக்குரியதாகும். உங்களுடைய உரிமைகள் அமுக்கப்பட்டு விடும். மற்றவர்களுக்கு உங்கள் மீது முன்னுரிமை வழங்கப்படும். உங்களுக்கு விருப்பமில்லாத செயல்களை நீங்கள் காண்பீர்கள். இத்தகைய சூழலில் எங்களுக்கு என்ன கட்டளை உள்ளது என்று சஹாபாக்கள் கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், அத்தகைய அதிகாரிக்குக் கட்டுப்பட்டவாறு தங்களின் உரிமையை அல்லாஹ்விடம் ஒப்படைத்து விட வேண்டும் என்று கூறினார்கள்.

முஸ்லிம் ஹதீஸிலும் இதற்கு சாதகமான கருத்து வருகிறது. அதன் மொழியாக்கம் இதுவாகும்.

ஆட்சியாளர் அநீதியிழைக்கக் கூடியவராகவும், கோபக்காரராகவும் இருந்தாலும் அவருக்கு கட்டுப்பட வேண்டும். எனவே அநீதியிழைக்கக் கூடிய அதிகாரிகளுக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும். அவருக்கெதிராக கிளர்ச்சி செய்யக் கூடாது. அவருக்கு கட்டுப்படுவதை மறுக்கக் கூடாது. அவருடைய கொடுமை மற்றும் தீமை நீங்குவதற்காகவும், அவருடைய சீர்திருத்தத்திற்காகவும் அழுது மன்றாடி துஆ செய்ய வேண்டும்.

ஓர் அஹ்மதி இதனையும் ஞாபகத்தில் வைத்து கொள்ள வேண்டும். அதாவது அவர், எந்த நிபந்தனையின் கீழ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்துள்ளார் என்பதைப் பார்க்க வேண்டும்.

உதாரணமாக, பைஅத்தின் இரண்டாவது நிபந்தனையில், பொய், விபச்சாரம், தீய பார்வை, கட்டுப்படாமல் இருத்தல், அநீதியிழைத்தல், நம்பிக்கைத் துரோகம் செய்தல், குழப்பம் விளைவித்தல், கிளர்ச்சி செய்தல் போன்ற தீமையிலிருந்து தவிர்ந்து கொள்வேன். மன உணர்ச்சிகள் எந்த அளவு தீவிரமடைந்தாலும் அவற்றை மேலாங்க விடாது அடக்கிக் கொள்வேன் என்று கூறப்பட்டுள்ளது.

நான்காவது நிபந்தனையில், அனைத்து படைப்பினங்களுக்குப் பொதுவாகவும், குறிப்பாக முஸ்லிம்களுக்கும் எனது மன உணர்ச்சியின் காரணமாக நாவினாலோ, கைகளினாலோ அல்லது வேறு வகையினாலோ எவ்வித தகாத தொல்லையும் கொடுக்க மாட்டேன் என்று கூறப்பட்டுள்ளது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

கிளர்ச்சியைப் பரப்புவது, அமைதியை சீர்குலைப்பது கொலை செய்வதை விட மேலானதாகும்.

மேலும் கூறுகின்றார்கள்: உலுல் அம்ர் என்பது பௌதீகத்தில் அரசர்களையும், ஆன்மீகத்தில் காலத்தின் இமாமையும் குறிக்கும். பௌதீக முறையில் நமது நோக்கத்திற்கு குறிக்கோள்களுக்கு எதிராக இல்லாதவர், அவரிடமிருந்து மார்க்கத்திற்குப் பலன் கிடைக்கும் என்றால் அவர் நம்மைச் சேர்ந்தவராவார்.

மேலும் கூறுகின்றார்கள்: இறைவன் இவ்வாறு செய்யாதிருப்பானாக. ஒருவேளை நீங்கள் இருக்கும் இடங்களில் பிளேக் நோய் பரவினால் நான் உங்களுக்கு அறிவுறுத்துகிறேன். அரசாங்கத்தின் சட்டதிட்டங்களுக்கு முதலில் கட்டுப்படக் கூடியவர்கள் நீங்களாகத்தான் இருக்க வேண்டும். அதிகமான இடங்களில் காவல்துறையினரிடம் கைகலப்பு நடைபெறுகிறது என்று கேள்விப்பட்டேன். அரசாங்க சட்டதிட்டங்களுக்கு எதிராக செயல்படுவது கிளர்ச்சியாகும். இது மிகப்பெரிய பாவமாகும். அரசாங்கத்தின் கடமை என்னவென்றால் நன்னடத்தை, நாட்டின் சம்பிரதாயங்கள், மற்றும் மதச்சார்பான விஷயங்களைப் பற்றி தெரிந்த ஒருவரை அதிகாரியாக நியமிக்க வேண்டும். எனவே நீங்கள் இந்த சட்டங்களைப் பின்பற்றி நடங்கள். தனது நண்பர்களுக்கும் அண்டை வீட்டார்களுக்கும் இந்த சட்டத்தின் நன்மைகளை எடுத்துரைக்க வேண்டும்.

பிறகு ஒருமுறை யுனிவர்சிட்டியில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதனைப் பற்றி கூறுகிறார்கள்.

குழப்பம் விளைவிக்கக்கூடிய மாணவர்களுடன் சேர்வதற்கான மேற்கொண்ட வழிமுறை நமது போதனை மற்றும் நமது நோக்கத்திற்கு முற்றிலும் மாற்றமானதாகும். அவர் (அதாவது ஒரு அன்பரைப் பற்றி கூறுகிறார்கள்). அவரும் இந்த கிளர்ச்சியில் ஒரு வகையில் கலந்து கொண்டுள்ளார்.

பிறகு கூறுகின்றார்கள்: லாஹூரில் மாணவர்கள் தன்னுடைய புரஃபொஸருக்கு எதிராக போராட்டம் நடத்தினார்கள். நமது ஜமாஅத்தைச் சேர்ந்த மாணவர்களிடம் அந்த போராட்டத்தில் கலந்து கொள்ளக் கூடாது என்று நான் கூறியிருந்தேன். தன்னுடைய ஆசிரியரிடம் மன்னிப்புக் கேட்டு உடனே தனது கல்லூரிக்கு போக வேண்டும் என்றும் கூறினேன். எனது கட்டளைக்குக் கட்டுப்பட்டு ஒரு மிகப்பெரிய நல்லுதாரணத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதன் மூலமாக மற்ற மாணவர்களும் உடனே கல்லூரிக்கு சென்று விட்டார்கள்.

**ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இதனைப் பற்றி கூறுகின்றார்கள்:**

ஒவ்வொரு முஸ்லிமும் அல்லாஹ்வுக்கு கட்டுப்படுதல், ரஸூலுக்குக் கட்டுப்படுதல் மற்றும் அதிகாரிகளுக்கு கட்டுப்பட்டு நடப்பது அவசியமாகும்.

உங்களுடைய அதிகாரிகள் மூலமாக அல்லாஹ்வுடைய கூற்றுக்கும் ரஸூலுடைய கூற்றிற்கும் எதிரிகளிடமிருந்து எதிர்ப்பு வெளிப்படுமானால் தன்னுடைய உணர்வை கட்டுப்படுத்தியவாறு நாட்டை விட்டு விட வேண்டும். உலில் அம்ரில் அதிகாரிகள், ஆட்சியாளர்கள் முதலில் உள்ளனர். இரண்டாம் இடத்தில் உலமாக்கள் உள்ளனர்.

சிலர் இந்த விஷயத்தையும் எடுத்து வைக்கிறார்கள். அதாவது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் காஷ்மீரிகளின் உரிமைக்காக இந்தியாவிலுள்ள முஸ்லிம்களுடன் இணைந்து கூட்டம் போன்றவற்றை ஏற்படுத்தினார்கள். அதற்கு அனுமதி வழங்கினார்கள். மேலும் மக்கள் இன்று அரசாங்கத்திற்கு எதிராக செயல்படக் கூடியதும் அதேபோன்று தான். எனவே இதுவும் அனுமதிக்கப்பட்டுள்ளது என்று கூறுகிறார்கள்.

மாறாக இது இக்பாலுடைய அழைப்பாக இருந்தது. அவர்களுடைய உரிமைகளைப் பெற்றுத் தருவதற்காகத்தான் கூட்டம் மற்றும் ஊர்வலம் போன்றவை நடைபெற்றன. இதில் எந்தவித சண்டையும் கிடையாது. எந்தவித பொருள் சேதமும் ஏற்படவில்லை. மாறாக அரசாங்கத்திற்கு, காஷ்மீர் மக்களுடைய உரிமை ஒவ்வொரு நாளும் பறிக்கப்பட்டுக் கொண்டிருப்பது பற்றி கவனமூட்டப்பட்டது. அவர்களுடைய சொத்து வெறும் பெயரளவில் மட்டுமே இருந்தது. அதிலிருந்து கிடைக்கக்கூடிய வருமானம் ராஜாவுக்கு சென்று விடுகிறது. எனவே அவர்களுடைய உரிமைகளை அவர்களுக்குப் பெற்றுத்தர கவனமூட்டப்பட்டது. எனவே ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் 29 நவம்பர் 1929-ல் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தைப் பற்றியும் அதில் அஹ்மதிகள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்றும் கேட்கப்பட்டது. அவர்கள் கூறினார்கள். ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளக் கூடாது. ஆனால் கூட்டம் மற்றும் ஊர்வலத்தில் கலந்து கொள்ள வேண்டும். கூட்டம் மற்றும் ஊர்வலத்திற்கு அரசாங்கம் ஒரளவு அனுமதி தந்துள்ளது. ஆகையால் அதில் கலந்து கொள்ளலாம்.

ஆனால் இதுபோன்ற ஆர்ப்பாட்டம், பொருள் சேதம், கடை அடைப்பு போன்றவைகளுக்கு அனுமதி கிடையாது.

மேலும் ஒரு சகோதரர் கேள்வி கேட்டார். ஊரில் அஹ்மதிகளுடைய கடைகள் மிகவும் குறைவாக உள்ளன. அது திறந்து இருந்தால் தாக்கப்படுவதற்கான வாய்ப்பு அதிகம் உள்ளது. மேலும் மக்கள் கம்புகளால் தாக்கி அடைக்கச் செய்வார்கள். அவ்வாறு யாராவது கம்பி வைத்து தாக்கி அடைக்கச் செய்தால் அடைத்து விட வேண்டும். மேலும் காவல் நிலையம் சென்று நாங்கள் கடையை திறக்க விரும்புகின்றேன். ஆனால் குறிப்பிட்ட சிலர் கடை திறப்பதை தடுக்கிறார்கள் என்று தகவல் கொடுக்க வேண்டும். காவல் அதிகாரிகள் பொறுப்பு எடுத்தக் கொண்டால் கடையை திறக்கலாம். இல்லையென்றால் திறக்க வேண்டாம்.

ஒரு சகோதரர் கேட்டிருக்கிறார். அதாவது ஆர்ப்பாட்டம் போராட்டம் போன்றவை சட்டத்தினால் தடுக்கப்பட்டவையா? இங்கு சட்டம் என்ற கேள்வியில்லை. மாறாக, இது வீணான செயலாகும். இதன் மூலமாக வாடிக்கையாளர் மற்றும் வியாபாரி இருவருக்கும் நஷ்டம் ஏற்படும். தொடர்ந்து கூறுகின்றார்கள்: இன்றைய நிலையில் முஸ்லிம்கள் லாஹூர் அல்லது தனது அருகிலுள்ள ஊருக்குச் சென்றால் இந்துக்களின் கடைகளில்தான் பொருள்களை வாங்க வேண்டியது வரும். ஏனென்றால் முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம் நடத்துகிறார்கள். இதன் மூலம் முஸ்லிம்களுக்குதான் நஷ்டம் ஏற்படும்.

மேலும் ஓரிடத்தில் கூறுகிறார்கள்: சட்டத்திற்குப் புறம்பாக செயல்படக் கூடியவர்களுக்கு ஒருபோதும் நாம் உதவி செய்ய முடியாது. சில ஜமாஅத்துகள் கிளர்ச்சிக்கான போதனைகளை போதிக்கின்றது. சிலர் கொலை கொள்ளையை வலியுறுத்துகின்றனர். சிலர் சட்டதிட்டங்களை பேணி நடப்பதை அவசியமாகக் கருதுவதில்லை. இந்த விஷயத்தில் எந்த ஜமாஅத்துடனும் நமது தொடர்பு இருக்காது. ஏனென்றால் இவை

நமது மார்க்கப் போதனைக்கு எதிரானவையாகும். மார்க்கத்தைப் பின்பற்றுவது நமக்கு எவ்வளவு முக்கியம் என்றால் இதற்கு முழு அரசாங்கமும் நமக்கு எதிராக ஆகிவிட்டாலும் பரவாயில்லை. எங்கேயாவது அஹ்மதியைப் பார்த்தால் அவரை சிலுவையில் அறைந்தாலும் சரி, நமது முடிவை ஒருபோதும் மாற்ற முடியாது. மார்க்க சட்டங்களும், நாட்டு சட்டங்களும் ஒருபோதும் புறக்கணிக்கப்படக் கூடாது. இதற்காக நமக்கு எவ்வளவு கஷ்டமான தொல்லைகள் கொடுத்தாலும் சரி அதற்கு மாற்றமாக செயல்படுவதற்கு அனுமதி கிடையாது. எனவே ஆர்ப்பாட்டங்களைப் பற்றி எல்லாவிதமான போதனைகளும் மிக தெளிவாக நம் முன்பு வந்து விட்டது.

நான் இதற்கு முன்பும் ஹதீஸின் விளக்கத்திற்கு சூரா பக்கராவுடைய வசனம் 206 கூறியிருந்தேன்.

அல்லாஹ் குழப்பத்தினை விரும்புவதில்லை. எங்கு கட்டாயம் புகுத்தப்படுகிறதோ அங்கு குழப்பங்கள் ஆரம்பமாகின்றன. இன்று துரதிஷ்டவசமாக இந்த குழப்பத்தின் வலையில் மிக அதிகமாக முஸ்லிம் நாடுகள் விழுந்து கிடக்கின்றன.

இதனுடைய முழுமையான வசனம் இதுவாகும். அதாவது அவர்கள் அதிகாரிகளாகி விட்டால் பூமியில் குழப்பத்தை விளைவிப்பதற்காகவும், விளைநிலத்தையும், படைப்பினத்தையும் அழித்து விடுவதற்காகவும் அதில் விரைவாகச் சுற்றித் திரிவர். ஆனால் அல்லாஹ் குழப்பத்தினை விரும்புவதில்லை.

எனவே அநீதியிழைக்கக்கூடியவர்கள் அதிகாரிகளாகி விட்டால் மற்றவர்களது அதாவது அவர்களுடைய எதிரிகளின் சொத்துக்கள் மற்றும் சந்ததியினர்களையும் தைரியமாக அழிப்பதற்கு முயற்சி செய்வார்கள். இந்த முழுமையான வசனம் அதிகாரிகளுக்கு எச்சரிக்கை செய்கிறது. அல்லாஹ்வின் பொதுவான ஒரு கூற்றும் உள்ளது.

எனவே, கிளர்ச்சி செய்யக் கூடியவர்களுக்கும் இதே கட்டளைதான் உள்ளது. நான் தொடக்கத்தில் கூறியது போன்று திருக்குர்ஆன் பொதுமக்களுக்கு மட்டும் கட்டளை பிறப்பிக்காது. மாறாக, அதிகாரிகளுக்கும் இதையே தான் கூறுகிறது. அதாவது தன்னுடைய அதிகாரத்தின் மீது பொறுமை கொண்டவாறு நாட்டில் குழப்பம் விளைவிக்கக் கூடாது. பொதுமக்களின் உரிமையை பறிக்கக் கூடாது. பணக்காரன் ஏழைகளுக்கு மத்தியில் அமைதியின்மை நிலவும் அளவுக்கு வித்தியாசம் பாராட்டக் கூடாது. இதன் விளைவாக நாட்டில் குழப்பம் பரவும். இதுபோன்ற அமல்கள் மூலம் இறுதியில் அல்லாஹ்வின் பிடியில் வரவேண்டியது வரும்.

இப்போதுள்ள நிலைமையை பாருங்கள். பாகுபாடில்லாமல் எல்லா இடங்களில் இருந்தும் சமுதாயத்தின் பொக்கிஷம் அபகரிக்கப்பட்டுள்ளது என்றும் பொதுமக்களுக்கு அவர்களுடைய உரிமை பறிக்கப்பட்டது என்ற முழக்கம்தான் எழும்புகிறது. எந்த அளவு துரதிஷ்டமாக இருக்கிறது. இவர்களுக்கு அல்லாஹ் குறிப்பாக அறிவுரையை கூறியும், எச்சரிக்கையையும் செய்தான். அவர்களின் முதன்மையானவர்கள் இன்றைய இஸ்லாமிய நாடுகளின் அதிகாரிகள் ஆவார்கள். இவர்கள்தான் இதுபோன்ற தவறான செயல்களில் ஈடுபடுகின்றனர். பொதுமக்களுடைய உயிர் மற்றும் பொருளதார முன்னேற்றத்திற்கு பொறுப்பு அதிகாரிகளேயாவர். அவர்களுடைய ஆரோக்கியத்திற்கு பொறுப்பு அதிகாரிகளேயாவர். இதுபோன்று பலவிதமான பொறுப்புகள் உள்ளன. இவை அனைத்தும் அரசாங்கத்தின் பொறுப்பாகும். இவை அனைத்தையும் நிறைவேற்ற வேண்டும். இதனை செய்யாததனால் குழப்பத்தை ஏற்படுத்துகின்றனர். குழப்பம் அல்லாஹ்வின் பார்வையில் மிகவும் வெறுக்கத்தக்கதாகும். எனவே நமது அதிகாரிகளுக்கு அல்லாஹ்வுடைய அருளுக்கு கண்ணியமளித்தவாறு அந்த போதனைகள் மற்றும் நாம் எடுத்துக் கூறுகின்ற அந்த முன்மாதிரியின்படியும் அமல் செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எவ்வாறு நீதியை நிலைநாட்டினார்கள். கிறித்தவர்களுடைய ஆட்சி மீண்டும் வந்ததும் மீண்டும் முஸ்லிம்களே தமது அதிகாரிகளாக வர வேண்டும் என்று அழுதழுது துஆ செய்தார்கள். ஆனால் இங்கு நியாயம் நிலைநாட்டப்படவில்லை என்று முஸ்லிம் அரசாங்கத்திற்கு எதிராக எழும்பி நிற்கிறது. எனவே முஸ்லிம்கள் மறைந்து போன அந்த இறையச்சத்தை தேட வேண்டும். அதிகாரிகளானாலும் சரி, பொதுமக்களாக இருந்தாலும் சரி இருவரும் இந்த விஷயத்தை கடைபிடித்தால் வெற்றி பெறுவார்கள்.

எனவே அஹ்மதிகளுக்கு தெளிவாக வழிகாட்டல் என்னவென்றால் அவர்கள் தங்களை இந்த குழப்பத்திலிருந்து பாதுகாக்க வேண்டும். துஆ செய்யுங்கள். உள்ளத்திலிருந்து துஆ எழுகின்றதென்றால் அல்லாஹ் விரும்பினால் அது ஏற்றுக் கொள்ளப்படும். அநீதியிழைக்கக்கூடிய அதிகாரிகள் என்றால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியது போன்று கண்டிப்பாக இரட்சிப்பு கிடைக்கும். இன்று வெளிப்படக்கூடிய மாற்றங்கள் ஒருவேளை தற்காலிக அமைதிக்காக இருக்கலாம். நிரந்தர அமைதிக்காக கிடையாது. அநீதியிழைக்கப்பட்டு ஆட்சி அதிகாரம் பறிக்கப்படும் போது புரட்சி ஏற்படும் போது அப்பொழுதும் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்கு பிறகு அநீதியிழைக்கக்கூடிய அதிகாரிகள் மீண்டும் வர ஆரம்பித்து விடுவார்கள். ஒரு அநீதியிழைப்பவர் சென்ற பிறகு வேறொரு அநீதியிழைப்பவர் வந்து விடுவார். ஆகையால் அல்லாஹ்விடம் நம்மீது அநீதியிழைக்கக்கூடிய அரசாங்கம் ஏற்படாமலிருக்க துஆ செய்ய வேண்டும். அல்லாஹ், முஸ்லிம்களும், அதிகாரிகளும் தங்களுடைய கடமைகள் மற்றும் உரிமைகளைப் புரியவும் மேலும் அதன்படி அமல் செய்ய முயற்சி செய்யபவர்களாக ஆக்குவானாக! இஸ்லாத்தின் அழகிய போதனையை உலகத்தின் முன் காட்டக்கூடியவர்களாக ஆக்குவானாக!

நான் ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு சில ஜனாஸா காயிப் தொழுகைகளை தொழ வைப்பேன்.

**முதல் ஜனாஸா அமத்துல் குத்தூஸ் சாஹிபா.** இவர் ரப்வாவிலுள்ள அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் இஷாஅத் செயலரான ஜனாப் அப்துல் ஹை சாஹிபின் மனைவி ஆவார். இவர்களுக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு திடீரென்று இரத்த அழுத்தம் அதிகமானது. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்கள். பிறகு மூளை செயலிழந்தது.பிறகு மார்ச் 25 ம் தேதி அங்கேயே மரணமடைந்தார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

இவர்களுடைய வயது 72 ஆகும். ஸ்ரீநகரைச் சேர்ந்த ஷேக் மஹ்பூப் இலாஹி சாஹிவுடைய மகள் ஆவார்கள். இவர்கள் பிராமணராக இருந்தார்கள். பிறகு இந்து மதத்தை விட்டு விட்டு தாமாக அஹ்மதியானார்கள். இவர்களுடைய பழைய பெயர் இராதா கிருஷ்ணன் ஆகும். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஷேக் சாஹிபை காதியான் வரவழைத்து மார்க்கக் கல்வி புகட்டினார்கள். பிறகு இவர்கள் மார்க்கத்திற்காக தொண்டாற்றினார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு உறவினராகவும் இருந்தார்கள், நல்ல செல்வச் செழிப்புள்ளவராக இருந்தார்கள். பிறகு வக்ஃபே ஸிந்தகியுடன் திருமணம் நடைபெற்றதால் தனது வக்ஃபை முழுமையாக செய்தார்கள். இருந்தாலும் தன்னுடைய வாழ்வை சந்தோஷமாகவே வாழ்ந்தார்கள். ஏழைகளுக்கு உதவி செய்யக் கூடியவர்களாகத் திகழ்ந்தார்கள். 7, 8 வயதுள்ள ஒரு பெண் குழந்தையை எடுத்து வளர்த்தார்கள். தர்பிய்யத் கொடுத்தார்கள். பிறகு தன்னுடைய செலவிலேயே திருமணம் செய்தும் கொடுத்தார்கள். இவர் நமது Humanity First அமைப்பின் Chairman -ன் தாயார் ஆவார்கள்.

**இரண்டாவது ஜனாஸா முஹம்மது ஸையத் அஷ்ரப் சாஹிப்.** இவர் லாஹூரைச் சேர்ந்த முஹம்மது ஷரீஃப் சாஹிபுடைய மகன் ஆவார்கள். இவர் மார்ச் 27ம் தேதி சாலையைக் கடக்கும் போது ஒரு விபத்தில் சிக்கினார்கள். மூன்று மோட்டார் சைக்கிளில் வந்து இவர் மீது இடித்தார்கள், இவர்களுடன் இவர்களுடைய மனைவியும் சென்று கொண்டிருந்தார்கள். இவருடைய மனைவிக்கு காயங்கள் ஏற்பட்டுள்ளன. இவர் ஓரமாக விழுந்தார்கள். இவர் மீது மோட்டார் சைக்கிள் கடந்து சென்றது. பிறகு எழுந்து நின்று ரிக்ஷாவை அழைத்து மருத்துவமனைக்குச் சென்று கட்டுப்போட்டார்கள். மருந்து கட்டி 10 நிமிடத்திற்குள் மூச்சுத்திணறல் ஏற்பட்டது. அங்கேயே அவர்கள் மரணமடைந்து விட்டார்கள். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

இவருடைய நானா ஃபஸல் தீன் சாஹிப் (ரலி), நானி ஹஸன் பீவி சாஹிப் (ரலி) ஆகிய இருவரும் ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களுடைய சாஹாபாக்கள் ஆவார்கள். இவர்கள் மிகவும் அதிக அளவு கிலாஃபத்துடனும் ஜமாஅத்துடனும் தொடர்பு வைத்திருந்தார்கள். ஜமாஅத்திற்கு விசுவாசம் உள்ளவராகவும் ஜமாஅத்தின் செயல்பாடுகளில் பங்கு பெறக்கூடியவராகவும் திகழ்ந்தார்கள். இவர்களுடைய ஒரு மகன் முகம்மது அஹ்ஸன் சையத் சாஹிப் ஜமாஅத்தின் முரப்பி ஆவார்கள். ஜாமியா அஹ்மாதிய்யா ஜெர்மனியின் ஆசிரியராக பணிபுரிகிறார்கள். இவரது தந்தை ஜனாஸாவை பார்க்கக் கிளம்ப முயன்றபோது அவருடைய தாயார் வக்ஃபிற்கு

முக்கியத்துவம் கொடுத்தவாறு உன்னுடைய கடமையை நிறைவேற்று. நீ இங்கே வரவேண்டாம் என்று கூறினார்கள்.

**மூன்றாவது ஜனாஸா ஜனாபா நயிமா பேகம் சாஹிபா.** இவர் அமெரிக்காவில் மரணமடைந்தார்கள். இவர் டாக்டர் அஸ்மத்துல்லாஹ் கான் சாஹிப் (ரலி) அவருடைய மகளாவார். டாக்டர் சாஹிப் அவர்கள் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுடைய சிறப்பு மருத்துவராவார்கள். நயிமா சாஹிபா அவர்கள் இரண்டாவது கிலாஃபத்தின் காலகட்டம் முதல் இப்போது வரை தனிப்பட்ட முறையில் இவர்களுக்கு தொடர்பு இருக்கிறது. மிகவும் நன்னடத்தை உடையவராகவும் கட்டுப்படக்கூடியவராகவும் விளங்கினார்கள். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் கட்டளைக்கேற்ப எம்.ஏ. வரலாறு படித்தார்கள். ஜாமியா நுஸ்ரத்தில் சிறிது காலம் பணியாற்றினார்கள். பிறகு இன்றைய காலத்தில் தன்னுடைய மகனுடன் அமெரிக்காவில் தங்கியிருந்தார்கள். அங்கேயும் லஜ்னாவுடைய பணிகளில் அதிக ஈடுபாடு கொண்ட பெண்மணியாகத் திகழ்ந்தார்கள். அல்லாஹ்வின் அருளால் மூஸியாக இருந்தார்கள். அல்லாஹ் இவருடைய தர்ஜாவை உயர்த்துவானாக.

**அடுத்த ஜனாஸா நயீம் அஹமது வஸீம் சாஹிப்.** இவர் மார்ச் 6 ஆம் தேதி அமெரிக்காவில் மரணம் அடைந்தார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களுடைய சஹாபி தாஜ் முஹம்மதீன் சாஹிபுடைய மகன் ஆவார்கள். காதியானில் துஆவுடைய மெஷின் என்ற பெயரில் அறியப்பட்டார்கள். மிகவும் நேர்மையான இறை நம்பிக்கைக் கொண்ட மனிதராவார்கள். ஜமாஅத்தினுடைய அனைத்துத் திட்டங்களிலும் அதிகமாக பங்குபெறக் கூடியராவார்கள். ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் மிர்ஸா நாஸிர் அஹ்மத் சாஹிப் (ரஹி) அவர்களுடன் கிலாஃபத்தின் காலத்திற்கு முன்பு அதாவது இரண்டாவது கிலாஃபத்தின் காலகட்டத்தில் மர்கஸை பாதுகாக்கும் பொறுப்பு இருந்தது. அப்போது அவர்களுடன் சேர்ந்து வேலை செய்து வந்தார்கள். ரப்வாவின் அடிக்கல் நாட்டு விழாவிலும் கலந்து கொண்டுள்ளார்கள். பிறகு அமெரிக்கா சென்று விட்டார்கள். அங்கேயும் அன்ஸாருல்லாஹ்வின் காயித் மற்றும் மால் பொறுப்புகளிலும் சேவை செய்திருந்தார்கள். சில மாதங்களுக்கு முன்பு திடீரென்று நெஞ்சு வலி ஏற்பட்டது. பிறகு நிலைமை மிகவும் மோசமாகி விட்டது. அன்ஸாருல்லாஹ் சார்பாக மஸ்ஜிதிற்காக சந்தா வசூலிக்கப்பட்டு வந்தது. அப்போது அவருக்கு நினைவு வந்தவுடன் கேட்ட முதல் கேள்வி மஸ்ஜிதைப் பற்றியும் சந்தாவைப் பற்றியும் சந்தா கணக்கு பற்றியும் தான் இருந்தது. மேலும் ஒரு சில பில்களுக்கு பணம் கொடுக்க வேண்டியதிருந்தது. அது கொடுக்கப்பட்டதா என்றே கேட்பார்கள். அல்லாஹ் இந்த மர்ஹூமுடைய தர்ஜாவை உயர்த்துவானாக! இவர்களுடைய நன்மையை இவர்களுடைய சந்ததிகளிலும் தொடரச் செய்வானாக! ஜுமுஆவிற்குப் பிறகு இவர்களுடைய ஜனாஸா தொழுகை நடைபெறும்.

★ ★ ★ ★ ★

JUMUA KHUTBA
HADHRAT KHALIFATUL MASIH V
AT BAITUL FUTUH MOSQUE, LONDON
ON 01.04.2011

Translated by : Maulvi ZIYAUL HAQ Sb.
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456